# நீங்கள்
# முகவரிற்கு (ஏஜென்சிக்) ஊடாக தொழில் புரிபவரா?

## சட்டத்தில் புதிய மாற்றம்! நவம்பர் 6, 2009 லிருந்து அமுலுக்கு வருகின்றது.

ஆம், நாம் சாதித்துள்ளோம்! தொழிலாளர் நடவடிக்கை நிலையமும் ஒன்ராறியோ மாகனம் முழுவதிலும் உள்ள அதன் அங்கத்துவர்களும், ஆதரவாளர்களும், ஏஜென்சிக்கு ஊடாக தொழில் செய்யும் தொழிலாளர்களும் பல வருடங்களாக ஏஜென்சிக்கு ஊடாக தொழில் புரியும் தொழிலாளர்களிற்கு மேலதிக சட்டப் பாதுகாப்பு வேண்டி போரடி வருகின்றார்கள்.இந்த மாற்றங்கள் ஆனது எங்களது நேரடியான முயற்சிகளிற்கு கிடைத்த நேரடிப் பயன் ஆகும்.

## உங்களுடைய முகவர்களும் (ஏஜென்சி) இந்தப் புதிய சட்டங்களை மதித்து நடக்கின்றார்களா?

**பொது விடுமுறைக்குரிய (Public Holiday) ஊதியம்.**
ஏஜென்சிக்கு ஊடாக வேலை செய்யும் அனைத்து தொழிலாளர்களும் ஏனைய தொழிலாளர்கள் போல் பொது விடுமுறைக்குரிய ஊதியத்தைப் பெற்றுக் கொள்ள சம உரிமை உள்ளது. நீங்கள் தற்பொழுது வேலை செய்து கொண்டிருந்தாலும், தற்காலிகமாக ஏஜென்சிக்கு ஊடாக வேலை அற்று இருப்பினும் உங்களிற்கும் பொது விடுமுறைக்குரிய ஊதியத்தைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் இருக்கின்றது. இந்த ஊதியத் தொகையை கணக்கிடுவது எவ்வாறெனில், அந்த பொது விடுமுறை தினத்திற்கு முந்தைய நான்கு கிழமைச் சம்பளம் மற்றும் அந்த நான்கு கிழமைக்கு உரிய விடுமுறைக்குரிய (vacation) தொகை ஆகியவற்றைக் கூட்டி 20 ஆல் வகுக்க வரும் தொகையே அந்த தொகை ஆகும். நீங்கள் ஏஜென்சிக்கு ஊடாக இந்த பொது விடுமுறைக்கு முதல் உள்ள நான்கு கிழமையும் வேலை செய்யாமல் இருக்கும் பட்சத்தில் இந்த தொகை $0 ஆக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

**கட்டணங்கள் அறவிடப்பட முடியாது.**
எந்த ஒரு ஏஜென்சியும் உங்களிற்கு வேலை பெற்றுத் தருவதற்கு உதவி செய்வதற்கோ அல்லது, நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உங்களை தயார்ப்படுத்துவதற்கோ அல்லது தன்விபரக் கோவையை தயாரிப்பதற்கோ அல்லது முகவர்களிடத்தில் உங்களை பதிவு செய்வதற்கோ உங்களிடம் இருந்து எந்த ஒரு கட்டணமும் அறவிட முடியாது.

**நிரந்தர வேலையை பெற்றுக்கொள்வதில் உள்ள தடைகள் குறைக்கப்பட்டுள்ளது.**
ஏஜென்சிக்கு ஊடாக ஒரு கம்பனியில் நீங்கள் வேலை பார்த்துக்கொண்டு இருக்கும் போது, உங்களை அந்தக் கம்பனி நேரடியாக தனது தொழிலாளியாக வேலைக்கு அமர்த்துவதை அந்த ஏஜென்சி தடை செய்ய முடியாது. ஆனால் உங்களை தங்களது நிரந்தர தொழிலாளியாக மாற்றிக் கொள்வதற்காக ஏஜென்சி அந்தக் கம்பனியிடமிருந்து கட்டணங்களை அறவிடலாம். ஆனால் உங்களிடம் இருந்து அறவிட முடியாது. நீங்கள் ஏஜென்சிக்கு ஊடாக அந்தக் கம்பனியில் வேலைக்கு அனுப்பப்பட்டு முதல் 6 மாதங்களிற்குள் உங்களை அந்தக் கம்பனி தனது சொந்த தொழிலாளியாக மாற்றினால் மட்டுமே இந்தக் கட்டணத்தை அறவிட முடியும். ஒரு கம்பனி உங்களிற்கு reference கடிதம் தருவதை ஏஜென்சி தடை செய்ய முடியாது.

**உங்களது வேலை பற்றிய விபரங்களை உங்களது ஏஜென்சி உங்களிற்கு கட்டாயம் வழங்க வேண்டும்.**
உங்களது ஏஜென்சி அதனது பெயர், தொடர்பு கொள்வதற்குரிய விபரங்கள் ஆகியவற்றை உங்களிற்கு எழுத்து மூலம் வழங்க வேண்டும். அத்துடன் தொழில் அமைச்சினால் வழங்கப்படுகின்ற உங்களது தொழில் உரிமைகள் பற்றிய விபரங்களை உங்களிற்கு வழங்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், உங்களிற்கு ஏஜென்சி ஒரு கம்பனியில் வேலை பெற்றுத் தருவார்கள் எனின்: அந்தக் கம்பனியின் பெயர், சம்பளத் தொகை, எத்தனை மணித்தியாளங்களிற்கு வேலை செய்ய வேண்டும், வேலை பற்றிய தகவல்கள், எவ்வளவு காலத்திற்கு (எனத் தெரிந்தால்) அந்த வேலை, சம்பளம் வழங்கும் கால இடை வெளி, சம்பளம் வழங்கும் நாள் என்ற விபரங்களை உங்களிற்கு உங்களது ஏஜென்சி கட்டாயமாக வழங்க வேண்டும். ஏஜென்சி இவை அனைத்தையும் உங்களிற்கு வேலை வழங்கும் பட்சத்தில் இயன்றளவு விரைவாகத் தரவேண்டும்.

**Termination Pay (வேலை நீக்க கொடுப்பனவு).**
நீங்கள் ஒரு கம்பனியில் ஆகக் குறைந்தது 3 மாதங்கள் வேலை செய்திருப்பின் உங்களது வேலை நிறைவிற்கு வரும்பட்சத்தில் (வேலை நீக்கம் அல்லது வேலை இல்லாமல் 20 கிழமைகள் இருந்திருப்பின் 13 கிழமைக்குப் பின்னர்) உங்களிற்கு அதற்குரிய அறிவித்தல் கடிதம் அல்லது அதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட தொகைப் பணம் வழங்க வேண்டும். நீங்கள் அந்தக் கம்பனியில் எவ்வளவு காலம் வேலை புரிந்தீர்கள் என்பதைப் பொறுத்தே அந்த வேலை நீக்கக் கடிதம் தரவேண்டிய காலம் அல்லது அதற்குப் பதிலாக தரப்படும் பணத்தின் தொகை நிர்ணயிக்கப்படும்.

**Severance Pay (சேவைக்கான கொடுப்பனவு).**
நீங்கள் ஒரு ஏஜென்சிக்கூடாக 5 வருடங்கள் அல்லது அதற்கும் மேல் வேலை செய்திருப்பின் உங்களது சேவைக்கான கொடுப்பனவு (Severance Pay) பெறுவதற்கு தகுதியுடையவராக இருக்கலாம். நீங்கள் Termination pay ஐயும் Severance pay ஐயும் சேர்த்துப் பெற்றுக் கொள்ளலாம். இந்த Severance pay ற்குரிய தொகையானது உங்களது வேலை இழப்பிற்குரிய காரணத்திலும், அந்த ஏஜென்சிக்கூடாக சம்பளம் பெறும் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் தங்கியுள்ளது.

**உங்களது உரிமைகள் பற்றி நீங்கள் கேட்பதினால் உங்களிற்கு எந்த தண்டனைகளும் வழங்கப்பட முடியாது.**
உங்களது உரிமைகளை நீங்கள் கேட்பதற்காக எந்த ஒரு ஏஜென்சியும் உங்களை தண்டனைக்குள்ளாக்க முடியாது. உங்களது உரிமைகளை நீங்கள் நிலை நாட்ட முற்படும் பட்சத்தில் அதற்காக தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டால் ஏஜென்சியும் அதற்கு ஊடாக நீங்கள் தினமும் வேலை செய்யும் கம்பனியும் அதற்கு பொறுப்பேற்க வேண்டும்.

**என்னுடைய ஏஜென்சி இந்தச் சட்டத்தை கடைப் பிடிக்காவிட்டால் நான் என்ன செய்யலாம்?**

நீங்கள் Workers' Action Centre ஐ தொடர்பு கொள்ளலாம். ஆல்லது எங்களுடைய இணையத்தளத்திற்கு விஜயம் செய்வது மூலம் இதுபற்றிய விபரங்களையும் அடுத்து நீங்கள் என்ன செய்யலாம் என்ற விபரங்களையும் நீங்கள் அறிந்து கொள்ளலாம். **சுகல அழைப்புக்களும் இரகசியமாக பேணப்படும்.**

## அடுத்த கட்டம்.

நாம் இந்தப் புதிய சட்ட உரிமையை ஓர் வெற்றியாகக் கொண்டாடலாம். ஆனாலும் இந்தப் புதிய சட்ட உரிமை எங்களை உண்மையில் முற்று முழுதாக பாதுகாப்பதற்கு போதுமானதாக இல்லை. இன்னும் நாங்கள் சிறந்த சட்ட அமுலாக்கத்தை உறுதி செய்தல், தற்போதைய தொழிலாளர் சட்டத்தை புதுப்பித்தல், மற்றும் ஏஜென்சிக்கு ஊடாக வேலை செய்பவர்களது சம உரிமை என்பவற்றிற்காக பெரியளவில் போராட வேண்டி உள்ளது. எங்களது செயற் திட்டமாகிய "ஒன்ராறியோ மாகான தொழிலாளர்களிற்கு ஒரு நியாயமான தொழில் உரிமை வேண்டும் - "Ontario Workers Need a Fair Deal" என்ற செயற் திட்டத்தில் நீங்களும் இணையுங்கள்.

WORKERS' ACTION CENTRE

Bill 139 & Temp Workers
Tamil, Jan 2010